Arumbu—Quarterly Newsletter
from
Tamil School of Missouri

# அரும்பு

தை, திருவள்ளுவராண்டு 2045 | January 2015 | இதழ் - 3

மிசௌரி தமிழ்ப் பள்ளி - Non-profit organization registered in state of Missouri

## தமிழ்த்தாய் வாழ்த்து

*நீராரும் கடல் உடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்*
*சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்*
*தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்*
*தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!*
*அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற,*
*எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே! தமிழணங்கே!*
*நின் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!*
*வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!*

– ***மனோன்மணீயம் பெ. சுந்தரனார்***



# ஆசிரியர் குறிப்பு

## சுனிதா ஜோதிலிங்கம்

அரும்பு படைப்பாளிகள் மற்றும் வாசகர்கள் அனைவருக்கும் அரும்பு குழுவினரின் உள்ளம் கனிந்த இனிய பொங்கல் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். பனிக்காலத்தில் அரும்பியுள்ள இந்த "அரும்பு" மலர் பலவிதமான சிறப்பு அம்சங்களுடன் மலர்ந்து உள்ளது.

இந்த இதழில், நாம் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய செய்தியாக பள்ளி முதல்வர் செந்திலின் "பள்ளிச் செயல்பாடுகள்" மற்றும் பொற்செழியனின் "தமிழ்ப் பள்ளியின் வரலாற்று நிகழ்வும், உலகத் தலைவர்களாய் நம் செல்வங்களும்" என்ற கட்டுரையும் வந்துள்ளது. உங்களை மகிழ்விக்க அம்சவர்ஷினி, யாஷூ, தியா பிரசன்னா, நவீன் மற்றும் உமா ஆகியோரின் வர்ணங்கள் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளன. ஹ்ருதயின் "சொற்படிக்கட்டு" மற்றும் வார்த்தை விளையாட்டு புதியதோர் முயற்சி. முயற்சி திருவினையாக்கும் என்ற சொல்லிற்கு இணங்க ஷிவானியின் "இடைவிடா முயற்சி"யை நாமும் முயன்று பார்க்கலாமே! சென்ற கோடை விடுமுறையின்போது தன் குடும்பத்துடன் கொண்டாடிய மகிழ்ச்சியை "என் இனிய கோடை விடுமுறை" என்ற கட்டுரை வாயிலாக நம்முடன் பகிர்ந்துகொண்ட ஹரிணி திருநாவுக்கு மிக்க நன்றி.

இந்த இதழை மிகவும் சுவாரசியமாக வெளியிட உதவிய அனைவருக்கும், அரும்பு குழுவினரின் மனமார்ந்த பாராட்டுக்களும் நன்றிகளும்!

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| ♦ தமிழ்ப் பள்ளி செய்தி மடல் | 3 |
| ♦ தமிழ்ப்பள்ளியின் வரலாற்று நிகழ்வும், உலகத் தலைவர்களாய் நம் செல்வங்களும் | 6 |
| ♦ ஓவியங்கள் | 8 |
| ♦ சொற்படிக்கட்டு | 10 |
| ♦ என் இனிய கோடை விடுமுறை - 2014 | 11 |
| ♦ இடைவிடா முயற்சி | 13 |
| ♦ சிந்திப்போம்! செயல்படுவோம்!! - பசு பராமரிப்பு! | 14 |


# தமிழ்ப் பள்ளி செய்தி மடல்

அனைவருக்கும் வணக்கம்,

மிசௌரி தமிழ்ப் பள்ளியின் இந்த கல்வி ஆண்டிற்கான முதல் இதழை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி. அனைத்து மாணவர்களும் முதலாம் பருவத் தேர்வை நிறைவு செய்து, இரண்டாம் பருவத் தேர்வுக்கு மிகுந்த ஆர்வத்துடன் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். இந்த கல்வி ஆண்டில் நமது இரண்டு கிளைகளிலும் சேர்த்து மொத்தம் 130 மாணவ, மாணவிகள் தமிழ்மொழியை முறைப்படி பயின்று வருகின்றனர்.

***மாணவர்களின் தர மதிப்பீடு சதவீதம் (Annual Grading percentile)***

கடந்த கல்வி ஆண்டில் நமது பள்ளி ஆசிரியர்களிடம் பெறப்பட்ட பின்னூட்டத்தின் அடிப்படையில், இந்த ஆண்டில் மாணவர்களின் திறனாய்வு தர மதிப்பீட்டு முறையில் சிறு மாற்றங்கள் செய்து வெளியிட்டுள்ளோம்.



*SURWEP (Speaking, Understanding, Reading, Writing Evaluation Process)*

*மாணவர்களின் தமிழ்க் கல்வித் திறனை மதிப்பீடு செய்வதற்கு, பருவத் தேர்வுகளை தவிர, தமிழ்மொழி பேச்சுத் திறன், கேட்புத் திறன், படிப்புத் திறன், எழுத்துத் திறன் போன்ற நான்கு முக்கிய திறன்களை மதிப்பீடு செய்வதற்கான* ***"Speak-Understand-Read-Write Evaluation Process (SURWEP)"*** *என்னும் வழிமுறையை அறிமுகம் செய்துள்ளோம். இந்த முறையை பயன்படுத்தி மாணவர்களின் மொழித் திறன்களை பரிசோதனை செய்து, ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட வளர்ச்சிக்குத் தேவையான திறனை நன்கு பயிற்றுவித்து, இந்த நான்கு திறன்களையும் மாணவர்களுக்கு வலிமைப் படுத்துவதுதான் இதன் நோக்கம்.*

*இதற்கு எந்த ஒரு சிறப்பு பயிற்சியும், முன்னறிவுப்பும் தேவை இல்லை. நிலை ஆசிரியர், இந்த முறையைப் பின்பற்றி திறனாய்வு மதிப்பீடு செய்து, அதன் அடிப்படையில் மாணவர்களுக்கு நன்கு பயிற்சி அளிப்பார்கள் என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறோம்.*

***பள்ளி அங்கீகாரம்** (School Accreditation)*

*தமிழ்ப் பள்ளியின் அங்கீகாரத்திற்கான ஆவணம், AdvancEd மண்டல அலுவலகத்தில் இருந்து கூடிய விரைவில் வர இருக்கின்றது. தர மதிப்பீட்டு சான்றிதழ் கிடைத்தவுடன் அது குறித்த அறிவிப்பு வெளியிட உள்ளோம்.*

***தமிழ்த் தேனீ** (Tamil Bee 2015)*

*இந்த ஆண்டிற்கான தமிழ்த் தேனீ போட்டி, வரும் மார்ச் மாதம் 7-ம் தேதி டேனியல் பூன் நூலகத்தில் நடைபெற உள்ளது. நமது மாணவர்கள் அனைவரையும் இந்த போட்டியில் பங்கேற்று பரிசு பெற ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

***பொங்கல் விழா***

*வரும் சனவரி 25-ம் நாள் நமது தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பொங்கல் விழா நடை பெற உள்ளது. வழக்கம்போல இந்த ஆண்டும், நமது பள்ளி மாணவ மாணவியர் பல கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று, அவர்களின் கலைத் திறமையை அரங்கேற்ற உள்ளனர். செயின்ட் லூயிஸ் நகரின் கடுங்குளிரையும், பனியையும் பொருட்படுத்தாமல் நிகழ்ச்சிக்கு தயாராகிக் கொண்டிருக்கும் அனைத்து மாணவர்களுக்கும், பயிற்சி அளித்து வரும் ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பெற்றோர்களுக்கும், வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். நம் மிசௌரி தமிழ்ப் பள்ளியின் ஒவ்வொரு குழந்தையும் தனித் திறமை வாய்ந்தவர். மொழியை நன்கு கற்றுத் தேறிவரும் அவர்களின் கலை வெளிப்பாட்டுக்கான ஒரு தளம்தான், பொங்கல் விழா! அனைத்துக் குழந்தைச் செல்வங்களையும், உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்துவது நம் கடமை. அவர்கள் திறனை மேலும் வளர்த்துக் கொள்ளும் ஆர்வத்தை தூண்டுவதாக இந்தப் பொங்கல் விழா அமையட்டும். அனைவரும், நம் மிசௌரி தமிழ்ப் பள்ளிக் குழந்தைகள். அனைத்து நிகழ்ச்சிகளும், நம் பள்ளி நிகழ்ச்சிகள். எல்லாரும் இன்புற்றிருக்க எண்ணும் மரபு வழி நம் பண்பாட்டு வழி.*

*எனவே அனைவரையும் பாராட்டி உற்சாகப்படுத்தி, அனைத்து நிகழ்ச்சிகளையும் பார்த்து மகிழ்வோம். குழந்தைகள் தங்கள் நிகழ்ச்சி முடிந்தவுடன் அமைதியாக இருந்தால், அனைத்து நிகழ்ச்சிகளையும் அனைவரும் கண்டு, கேட்டு மகிழ ஏதுவாகும்.*

**வேண்டுகோள்:**

*பள்ளி வளர்ச்சிக்கு, பெற்றோர்களின் பின்னூட்டம் மற்றும் ஆதரவு மிகவும் அவசியம். எனவே, பாடப் புத்தகம், வீட்டுப் பாடம் மற்றும் பள்ளி நிகழ்வுகள் பற்றிய உங்கள் ஆலோசனைகளைத் தெரியப்படுத்தவும். பெற்றோர்-ஆசிரியர் கூட்டம் மற்றும் பள்ளி பெற்றோர்கள் கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டு, உங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம். பள்ளியின் செயல்பாடுகளுக்குத் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் மிசௌரி தமிழ்ப் பள்ளியின் நன்றிகள். நமது பள்ளியின் முன்னேற்றத்திற்கு, உங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பள்ளியின் மின்னஞ்சல் school@missouritamilsangam.org என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்.*

------------------------------- *மிக்க நன்றி* ----------------------

**செந்தில் இராதாகிருஷ்ணன்**


# தமிழ்ப்பள்ளியின் வரலாற்று நிகழ்வும், உலகத் தலைவர்களாய் நம் செல்வங்களும்

அமெரிக்கத் தமிழ்ப் பள்ளிகளின் முன்னோடியாக மிசௌரி தமிழ்ப்பள்ளி திகழ்கிறது என்பது மீண்டும் மெய்ப்பிக்கப்பட்டு, செயல்வடிவம் பெற்றுள்ளது. அமெரிக்காவில், கிட்டத்தட்ட நூறு தமிழ்ப் பள்ளிகள் உள்ளன. அதில் நான்கு, மாநில தமிழ்ப் பள்ளிகள் தர நிர்ணயம் பெற்றிருந்தன. அமெரிக்க தமிழ்ப் பள்ளிகளில் ஐந்தாவதாகவும், ATA பாடத்தில் இணைந்த முதல் மூன்று பள்ளிகளுள் ஒன்றாகவும்(மிசௌரி, மின்னசோட்டா, ஹூசுடன்) மிசௌரி தமிழ்ப் பள்ளி தர நிர்ணயம் பெற்றுள்ளது மிகமிக மகிழ்ச்சியான வரலாற்றுச் சாதனை.

இதற்கு முழுமுதல் காரணமானவர்கள், தமிழ்ப் பள்ளியில் அயராது உழைக்கும் ஆசிரியர்கள், ஆர்வமுடன் கற்கும் மாணவர்கள், இவர்களை சிறப்பாக வழிநடத்திய தர நிர்ணயக் குழு தன்னார்வலர்கள், பள்ளிக் குழுவினர், ஆதரவு நல்கும் பெற்றோர் ஆகியோர்.

மிசௌரி தமிழ்ச் சமூகக் கட்டமைப்பின் வரலாற்றில், குறிப்பிடத் தகுந்த இந்த முயற்சிக்கு உறுதுணையான அனைவருக்கும், மனமார்ந்த பாராட்டுக்களும், உள்ளார்ந்த நன்றியும் தமிழ்ப் பள்ளியின் சார்பில் உரித்தாக்குகிறேன்.

## குழந்தைகள் தினமும் நேரு மாமாவும்




எத்தனையோ தலைவர்கள் இருந்தார்கள், மறைந்தார்கள். ஆனால் ஒருவரின் பிறந்தநாள் மட்டுமே, குழந்தைகள் தினமாக இந்தியாவில் கொண்டாடப்படுகிறது. அவர்தான், மோதிலால் பெற்றெடுத்த முத்து, மோகன்தாஸ் காந்தியின் தளபதி, இந்தியாவின் அடையாளச் சொத்து எனப் பாராட்டப்பட்ட இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித நேரு.

உலகில் ***அணிசேரா இயக்கம்*** என்ற நாடுகளின் நடுநிலையான கூட்டமைப்பு உருவாகக் காரணமாக இருந்தார். இவர், புதியன படைக்கும் நம்பிக்கை நட்சத்திரங்களாக, குழந்தைகளின்பால் கொண்டிருந்த அன்பின் காரணமாக **நேரு *மாமா*** என அழைக்கப்பட்டார்.

*அவர், இந்திய விடுதலைக்காக அறவழியில் காந்தியுடன் இணைந்து போராடினார். எனவே, அன்றைய பிரிட்டிசு அரசாங்கம் அவரை பதினான்கு ஆண்டுகள் சிறையில் அடைத்தது. அப்போது, அவரின் அன்பு மகள் இந்திராவுக்கு வயது பதிமூன்று. தினந்தோறும் கதைகள் சொல்ல இயலாததால், சிறையில் இருந்தபடியே உலக வரலாற்றை, உலக நாகரிகங்கள் தோன்றிய நாள்முதல், குழந்தைகளின் மனதில் பதியும்வண்ணம் கடிதங்களாக எழுதி அனுப்பினார்.*

*இப்படி தொடர்ந்து உலக வரலாற்றை, சிறுவயதிலிருந்து கதைபோல் கற்றதனால், பின்னாளில் இந்தியத் திருநாட்டிற்குத் தலைமை ஏற்கும் தகுதி பெற்று, இந்தியாவின் பிரதமரானார் அவர் மகள் இந்திரா. அந்தக் கடிதங்கள் பிறகு,* ***Glimpses of World History*** *என்ற பெயரில் நூலாக வெளியாகியது. அந்தக் கடித நூலை இந்த இணைப்பில் வாசிக்கலாம்.*

*http://historydepartmentphilos.weebly.com/uploads/2/6/6/1/26612531/jawaharlal_nehru_glimpses_of_world_history.pdf*

*தமிழ்ப் பள்ளிக் குழந்தைகள் இந்த நூலை தாங்களாகவோ, அல்லது பெற்றோரின் துணையுடனோ சிறுசிறு பகுதிகளாக தொடர்ந்து கதைபோலப் படித்து, பெற்றோருடன் அதுபற்றி ஆங்கிலத்திலும், தமிழிலும் உரையாட வேண்டுகிறேன். இதன்மூலம் உலக வரலாற்று அறிவுபெற்ற நாளைய உலகத் தலைவர்களாய், நம் தமிழ்ப் பள்ளிக் குழந்தைகள் உருவாகவேண்டும் என்பதே நமது அவா.*

# ஓவியங்கள்






தியா பிரசன்னா

# ஓவியங்கள்









# சொற்படிக்கட்டு

**ஹ்ருதய் வி. சுஸ்வரம்**

*நீங்களும் அமைக்கலாமே! ஒரு சொல்லின் இறுதி எழுத்தைக் கொண்டு அடுத்த சொல்லைத் தொடங்க வேண்டும்.*

**பூ**

**பூச்சி**

**சிலந்தி**

**திமிங்கலம்**

**அப்பா**

**பாப்பா**

**பாம்பு**

**புலி**

*கீழே உள்ள கட்டங்களில் ஒளிந்திருக்கும் இரண்டெழுத்து வார்த்தைகள் என்ன?*

| | | |
|---|---|---|
| ப | நெ | வா |
| க | ல் | கா |
| பா | வி | பு |

# என் இனிய கோடை விடுமுறை - 2014

**ஹறிணி திருநா (நிலை-2)**
**உதவி: ரேவதி திருநா**

*குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும், ஒவ்வொரு வருடமும் ஆவலுடன் எதிர்பார்ப்பது கோடைக்காலம்தான். அதுவும் என் போன்ற குழந்தைகளுக்கு, கோடை விடுமுறை என்றாலே ஒரே கொண்டாட்டம்தான்! பள்ளி, வீட்டுப்பாடம் என அனைத்திற்கும் விடுமுறை. நன்கு விளையாடலாம், தொலைக்காட்சி பார்க்கலாம், புத்தகம் படிக்கலாம், நீண்ட நேரம் தூங்கலாம், சுற்றுலா செல்லலாம் ..... மேலும் பல.*

*முதல் கொண்டாட்டம், இந்தியாவிலிருந்து தாத்தா, பாட்டி வந்திருந்து என்னுடன் தங்கியிருந்ததுதான்! அவர்களுடன் உண்பது, வெளியில் செல்வது, விளையாடுவது, புதுப்புது கதைகள் கேட்பது, உறங்குவது என ஒவ்வொரு நாளும் மிகவும் ஆனந்தமாக இருந்தது. தாத்தா எனக்கு "கேரம்" விளையாட்டு கற்றுக் கொடுத்தார். பாட்டி எனக்கு நன்கு பாட கற்றுக் கொடுத்தார்.*

இரண்டாவதாக, நம் நகர இந்து கோவிலில் கும்பாபிஷேக திருவிழா மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. நானும், என் அப்பா திருநாவும் ஐயப்பன் சுவாமிக்கு விரதமிருந்து, மாலை அணிந்து, இருமுடி சுமந்து விழாவில் கலந்து கொண்டோம்.

மூன்றாவதாக, நம் நகரில் நடைபெற்ற "பெட்னா" தமிழ்த் திருவிழாவில் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, மற்றும் சிகாகோவிலிருந்து அர்விந்த் அண்ணா என அனைவரும் கலந்து கொண்டு, நிகழ்ச்சிகள் அனைத்தையும் கண்டு களித்தோம். விழாவில் "வேலு மாமா" நடத்திய நாடகத்தில், நான் எலியாக நடித்தேன். மேலும், சங்கங்களின் சங்கமம் அணிவகுப்பில் அம்மா ரேவதியுடன், நானும் "மயில்" வேடம் அணிந்து கலந்து கொண்டேன்.

நான்காவதாக, நண்பர்களின் குடும்பத்தினருடன் "லேக் ஆப் ஒசார்க்"*(Lake of Ozark)* நகரம் சென்று, கூடாரம் அமைத்து தங்கி இருந்தோம். அங்கு படகு மற்றும் பைக் பயணம், வானில் பறப்பது, நீரில் மிதப்பது என ஏரியில் நன்கு விளையாடினோம். இரவில் கூடார நெருப்பு, பாட்டு, நடனம் என்று மகிழ்ச்சியுடன் பொழுது போக்கினோம்.

இறுதியாக, குடும்ப விழாவில் கலந்து கொள்ள "இர்விங்"*(Irving, TX)* நகரம் சென்றிருந்தோம். தாத்தா, பாட்டி, மாமா, அத்தை, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை என அனைத்து உறவினர்களும் ஒன்றுகூடி பாட்டு, விளையாட்டு, விருந்து என்று அமர்க்களமாக இருந்தது விழா. அன்னையர் தினம், தந்தையர் தினம், பெற்றோர்கள் தினம் மற்றும் என் பிறந்த தினம் என பல விழாக்கள் கொண்டாடி மகிழ்ந்தோம்.

பெற்றோர்கள், உறவினர்கள், மற்றும் நண்பர்கள் அனைவருடன் மகிழ்ச்சியாகவும், குதூகலமாகவும் கழிந்த என் கோடை விடுமுறை மிகவும் இனிமையானதுதானே!






# இடைவிடா முயற்சி

## ஷிவானி ஐயனார் (நிலை-3)

*நான் வேரதர் ஆரம்பப் பள்ளியில் நான்காம் வகுப்பில் படிக்கிறேன். எங்கள் பள்ளியின் நவம்பர் மாத நற்பண்புச் சொல் "இடைவிடா முயற்சி ......." ஆகும். அதற்கு என்னுடைய இடைவிடா முயற்சியாக, கல்வியில் எல்லா பாடங்களிலும் (நம் தாய் மொழியாம் தமிழ் உட்பட), முதல் மதிப்பெண்கள் பெறுவதற்கு இடைவிடா முயற்சி செய்கிறேன் என்றும், என்னுடைய பொழுது போக்குக் கலையாம் அழகுக் கலையில் சிறந்து விளங்க தொடர்ந்து பல முயற்சிகள் செய்து வருகிறேன் என்றும், அதில் முக்கியமாக முடி அலங்காரத்தில் சிறந்து விளங்க தினமும் விதவிதமான முடியலங்காரம் செய்து பழகுவதைக் குறிப்பிட்டுள்ளேன். நாம் ஈடுபடும் எல்லா நற்செயல்களையும் இடைவிடா முயற்சியுடன் செய்து வெற்றி காணவேண்டும் என்று முடிவெடுப்போம்.*







# சிந்திப்போம்! செயல்படுவோம்!! - பசு பராமரிப்பு!

**சாவித்திரி மஹேஷ்**

### *தாயாக விளங்கும் பசு*

*வாயில்லா ஜீவன் என்ற வர்க்கத்தைச் சேர்ந்ததே பசு! அப்படி இருந்தாலும், அது "அம்மா" என்று அடிவயிற்றிலிருந்து வாய்விட்டுக் குரல் கொடுக்கிறது. தமிழில், தாயாரைக் குறிக்கும் சிறப்பு சொல் இந்த "அம்மா" என்ற சொல். "அம்மா" என்று சொல்கிற அந்தப் பசுவே, நமக்கெல்லாம் அம்மாவாக இருக்கிறது. அம்மாவின் முதல் இலக்கணம் என்ன? பால் கொடுப்பதுதான். நாம் குழந்தையாய் இருந்தபோது நம்மைப் பெற்றெடுத்த தாயார் நமக்குப் பாலூட்டி உயிரூட்டினாள். அந்தக் குழந்தைப் பிராயத்திலேயே பசுவும் நமக்குப் பால், உயிருக்கு உரம் தந்தது. பெற்ற தாய் பால் கொடுப்பது நம்முடைய குழந்தைப் பருவத்தோடு முடிந்துவிட்டது. ஆனால் நமக்கு வயதான பின்னரும் பசு தரும் பாலும், அதிலிருந்து பெறப்படுகிற தயிர், மோர், நெய் ஆகியனவும் நம் உணவில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. மிகவும் வயதான நிலையிலும், மற்ற உணவுகள் குறைந்து அல்லது நின்றே போன நிலையிலும், ஒரு மனிதருடைய உடலில் உயிரை நிறுத்திக் கொடுக்கும் உணவாகப் பசு தருகிற பாலே இருக்கிறது. நம்முடைய ஆயுளின் ஆரம்பத்தில் ஒரு குறுகிய காலகட்டத்தில் மட்டும் நம்மைப் பெற்றெடுத்த தாய் பால் தருகிறாள் என்றால், பசுவோ நம்முடைய ஆயுட்காலம் முழுவதும் பால் தருகிறது. அதனால்தான் உறவுகளிலேயே பரம உத்தமமான தாயுறவைப் பசுவுக்குத் தந்து, "கோமாதா" என்று சொல்லப்பட்டு வருகின்றது.*



*"கோ" என்றால் "பசு" என்று எல்லோருக்கும் தெரியும். Cow என்ற வார்த்தையும் "கோ"-விலிருந்து வந்ததுதான். அகராதியிலேயே அவ்வாறுதான் உள்ளது. அந்த "கோ"-வை மாதாவாகவே நம்முடைய தேசத்தில் தொன்றுதொட்டுக் கண்டு அன்பும், பக்தியும் செலுத்தியிருக்கிறார்கள். அன்பும், சாந்தமும் நிறைந்த தோற்றத்தோடு நிற்கிற ஒரு பசுவைப் பார்த்தாலே, பெற்ற தாயாரைப் பார்ப்பது போன்ற ஒரு உணர்ச்சி தோன்றும்.*


### *பசுவுக்கு ஒரு வாயுறை*

**யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை,**
**யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை,**
**யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி,**
**யாவர்க்குமாம் பிறர்க்(கு) இன்னுரைதானே.**

*பசுவை தெய்வமாகப் பூஜை செய்வது இருக்கட்டும், அது சிலர்தான் செய்யமுடியும். ஆனால் எவரானாலும் செய்ய வேண்டிய ஒன்று இருக்கிறது. பசுவுக்கு உணவு போடுவதுதான் அது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும், ஒரு பசுவுக்குக் கைப்பிடி அளவு புல்லாவது கொடுக்க வேண்டும். திருமூலர் "திருமந்திர"த்தில் பிரதி தினமும் ஜீவர்கள் செய்ய வேண்டிய கடமைகளில், ஈஸ்வரனுக்கு ஒரு பச்சிலை, அதாவது ஒரு வில்வ/துளசி இலையேனும் அர்ச்சிப்பது, ஒரு கைப்பிடியாவது உணவு பிச்சை போடுவது ஆகிய இரண்டுக்கும் நடுவில், பசுவுக்கு புல் கொடுப்பதையும் சொல்லியிருக்கிறார். முடிவாக, மற்றவர்களிடம் இனிமையாகப் பேசுவதையும் சொல்லியிருக்கிறார்.*

## முற்காலத்தில் நடந்த பசு பராமரிப்பு

வெள்ளைக்கார அரசாங்கம் வருவதற்கு முன்பு ஊருக்கு ஊர், கிராமத்துக்கு கிராமம் பசுக்களுக்கென்றே பிரத்யேகமாக மேய்ச்சல் பூமி விடப்பட்டிருக்கிறது. பசு பராமரிப்பிற்கான முக்கியத்துவம் தெரியாத வெள்ளைக்கார அரசாங்கம், அந்த பூமிகளையும் வரி வசூலிக்கும் நிலமாக மாற்றிவிட்டது. அதிலிருந்து பசுவின் வயிற்றில் அடி விழ ஆரம்பித்தது. அதைப்போல், மந்தைக்கரை குளம் என்று பசுக்களுக்காகவே முன்காலத்தில் இருந்த குளங்களும், இப்போது எடுக்கப்பட்டுவிட்டன. அநேக கிராமங்களாக இருந்தவை உருமாறித்தான், இன்றைய சென்னை மாநகரமாகி இருக்கிறது. இப்போது மந்தைவெளி என்று இருக்கிற பேட்டை, ஆதியில் மேய்ச்சல் பூமியாகவே இருந்திருக்கிறது. அமிஞ்சிக்கரையை அமைந்தகரை என்கிறார்களே, அது மந்தைக்கரை குளமாகத்தான் இருந்திருக்க வேண்டும்.



முன்னாளில், மாடுகளிடம் எத்தனை அபிமானம் காட்டி அதை ரக்ஷித்தார்கள் என்பதற்கு ஒரு சான்று. மனிதர்களாகப் பிறந்தவர்கள் கடைத்தேறுவதற்காக செய்யவேண்டிய தர்மங்களை எண் நான்கு அதாவது, முப்பத்திரண்டு அறங்கள் என்று சொல்லியிருக்கிறது. அதை இரட்டிப்பாக்கி, அறுபத்து நான்கு அறங்கள் என்றும் சொல்வது உண்டு. அவற்றில் ஒன்றாக, "**ஆதீண்டு குற்றி நிறுவுதல்**" என்பதைச் சொல்லியிருக்கிறது. அது என்ன? ஒரு பசுவுக்கு உடம்பிலே அரிக்கிறது. நமக்கு எங்கே அரித்தாலும், நாம் கையை வளைத்துச் சொறிந்து கொள்கிறோம். பசுவோ, பின்னங்காலைக் கொண்டுதான் சொறிந்து கொள்ளும். அப்போது சில இடங்களில் அரித்தால், அதற்கு சரியாக சொறிந்துகொள்ள வராது. அவ்வாறு ஏற்படும்போது அது, அரிப்பெடுக்கிற பாகத்தை நேரே வைத்துத் தேய்த்துச் சொறிந்துகொள்வதற்கு ஏதுவாகக், கல்லை நட்டு வைப்பதுதான் "ஆதீண்டு குற்றி நிறுவுதல்" (ஆ => பசு). ஆங்காங்கே, இம்மாதிரி நட்டு வைத்தார்கள். அந்த வழியில் போகிற மாடுகள், அவற்றில் சொறிந்துகொண்டு தினவு தீர்த்தன.

## பசுவுக்கு நீர்

மேய்ச்சல் முடிந்து வரும் பசுவுக்கு, தாகம் தணிய நீர் தருவதுகூட ஒரு அறமாக கருதப்பட்டது. வள்ளுவர்கூட, "பசுவிற்கு நீர் வேண்டும் என்று அறம் நோக்கி இரந்து கேட்டாலும், இரத்தலைவிட நாவிற்கு இழிவானது மற்றொன்று இல்லை" என்கிறார். (குறள்: 1066).

> **ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்த தில்.**

இப்படிச் சின்ன விஷயங்களைக்கூடப் பரம அறமாக நினைத்து பசுவுக்குச் செய்த தேசத்தில், நாம் அதை எலும்பும் கூடுமாக்குகிறோம், வதையாவதற்கு விடுகிறோம் என்றால் அது நமக்கு, நமது பண்பாட்டிற்கு மிகப்பெரும் அவதூறு ஆகும்.

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்........

**Tamil School of Missouri Newsletter**

**Arumbu—Edition 3, January 2015**

Editor: Mrs. Sunitha Jothilingam

Sub-Editor: Mrs. Revate Thruna

Newsletter Design: Mr. Babu Sampath

**Executive Committee**

President: Mr. Porchezhian Ramaswamy

School Director: Mr. Senthil Radhakrishnan

Development Director: Mr. Elango Thirupathy

**Administrative Office**

Mrs. Meena Ganapathy

Mrs. Priya Sridhar

Mrs. Priya Gnanasivam

Principal: Mr. Alagendran Sundarrajan

Secretary: Mr. Dhanabal Radhakrishnan

Treasurer: Dr. Jothilingam Sivapackiam

Course Director:

Mrs. Bhuvaneshwari Nandakumar

**மிசௌரி தமிழ் பள்ளி செய்திமடல்**

**அரும்பு-இதழ்-3, தை, திருவள்ளுவராண்டு 2045**

ஆசிரியர்: திருமதி. சுனிதா ஜோதிலிங்கம்

இணையாசிரியர்: திருமதி. ரேவதி திருநா

செய்திமடல் வடிவமைப்பு: திரு. பாபு சம்பத்

**செயற்குழு நிர்வாகிகள்**

தலைவர்: திரு. பொற்செழியன் ராமசாமி

பள்ளி இயக்குனர்: திரு. செந்தில் இராதாகிருஷ்ணன்

வளர்ச்சிப் பணி இயக்குனர்: திரு. இளங்கோ திருப்பதி

**நிர்வாக அலுவலகம்**

திருமதி. மீனா கணபதி

திருமதி. பிரியா ஸ்ரீதர்

திருமதி. பிரியா ஞானசிவம்

முதல்வர்: திரு. அழகேந்திரன் சுந்தர்ராஜன்

செயலாளர்: திரு. தனபால் இராதாகிருஷ்ணன்

பொருளாளர்: முனைவர். ஜோதிலிங்கம் சிவபாக்கியம்

பாடத் திட்ட இயக்குனர்:

திருமதி. புவனேஸ்வரி நந்தகுமார்



நன்றி

தமிழ்ப் பள்ளியின் அரும்பு மலர் வெளிவர பெரிதும் உதவிய இதழ் ஆசிரியர் திருமதி. சுனிதா ஜோதிலிங்கம், இணையாசிரியர் திருமதி. ரேவதி திருநா, இதழ் வடிவமைப்பாளர் திரு. பாபு சம்பத் மற்றும் பள்ளியின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் தமிழ்ப் பள்ளியின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

Colourful bloom of Gloriosa Lily-botanical name is 'Gloriosa superba', in Tamil called as `Karthigaipoo', the **State flower of Tamilnadu**